பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 10 2026 **MONDAY** 7.15 AM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வங்கித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியாவும், சிங்கப்பூரும் முடிவு செய்துள்ளன.

2. சவுதி அரேபியாவின் ரியாத் விமான நிலைய தாக்குதலில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. இந்திய மாலுமிகளின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ரஷ்யா — யுக்ரைன் இடையே எரிசக்தி போர் நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில், இந்தியா - மலேசியாவை வென்றது.

--இனி விரிவான செய்திகள்—

<<<<<<>>>>>>

வங்கித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் - சிங்கப்பூரும் முடிவு செய்துள்ளன

மூன்று நாள் பயணமாக சிங்கபூர் சென்ற நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று அந்நாட்டு வங்கித்துறையினருடன் ஆலோசனை நடத்தினார்.

முதலீடுகளை இந்தியாவில் மேலும் அதிகரிப்பது குறித்து சிங்கப்பூர் வங்கித் துறையினருடன் திருமதி நிர்மலா சீதாராமன் ஆலோசனை நடத்தியதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

பங்கு முதலீடுகள் மற்றும் கடன் கட்டமைப்பில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் அவர், சிங்கப்பூர் நிறுவனங்களுடன் ஆலோசனை மேற்கொண்டதாக நிதியமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

சவுதி அரேபியாவின் ரியாத் விமான நிலைய தாக்குதலில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ரியாத்தில் உள்ள இந்திய தூதரகம் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், உள்ளூர் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த தாக்குதலில் காயமடைந்த இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அவரது குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் காயமடைந்த இந்தியர்களில் மூன்று பேர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் தூதரகம் கூறியுள்ளது.

இதனிடையே, தாக்குதல் நடத்தப்பட்ட ரியாத் சர்வதேச விமான நிலையத்தின் மீது மீண்டும் மற்றொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 11 பேர் காயமடைந்துள்ளதாகவும் சவுதி அரேபிய ராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்திய மாலுமிகளின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**Hormuz** நீரிணைப்பகுதி பகுதியில் மார்ஷல் தீவுகளை சேர்ந்த கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 11 இந்திய மாலுமிகள் பயணித்ததாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதில் இருந்த 9 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும், இருவரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

மஸ்கட்டில் உள்ள இந்திய தூதரகம் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், மாயமான மாலுமிகளை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஏற்க முடியாது எனவும், பதற்றத்தை தணிக்க புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

அருணாச்சலப் பிரதேசத்தில் உயர்கல்வி, சுகாதாரம் மற்றும் மகளிர் மேம்பாடு தொடர்பான பல்வேறு திட்டங்களுக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு **Pema Khandu** தலைமையில் இட்டா நகரில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டங்கள் அருணாச்சலப்பிரதேசத்தின் வளர்ச்சியை அதிகரிக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி, அரசு நிர்வாக தலைமைப் பொறுப்பில் **25** ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதற்கு, அமைச்சரவைக் கூட்டத்தில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

திரிபுராவில் சுகாதார கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு மாணிக் சஹா தெரிவித்துள்ளார்.

அகர்தலாவில் நேற்று நடைபெற்ற சுகாதார முகாமில் பங்கேற்று பேசிய அவர், மாநிலத்தில் அவசர நோய் சிகிச்சை பிரிவு, இதயநோய் சிகிச்சைக்கான வசதிகள் போன்றவை அதிக அளவில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, உயர்தர மருத்துவ சிகிச்சைகளுக்காக பலர் வெளிமாநிலங்களுக்கு சென்றதாகவும், தற்போது அது 80 சதவீத அளவுக்கு குறைந்துள்ளதாகவும் திரு மாணிக் சஹா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

அஸ்ஸாமில் இளையோருக்கு அதிக அளவில் அரசு வேலைவாய்ப்புகளை வழங்க மாநில அரசு தொடர்ந்து தீவிரமாக செயலாற்றி வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

மாநில அரசுப்பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 400 பேருக்கு நேற்று குவஹாத்தியில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு அரசுப்பணிகள் வழங்கப்பட்டுள்ளதாக திரு ஹிமந்த பிஸ்வ சர்மா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தொழில்நுட்பக் கல்வியில் மகளிரை ஊக்குவிக்க மத்திய அரசு பிரகதி என்ற ஊக்கத்தொகைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனளித்துள்ளதாக தமிழகத்தின் சேலம் அரசு மகளிர் பொறியியல் கல்லூரியில் படிப்பை நிறைவு செய்த மாணவிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — மாணவிகள் - 60 Sec.)***

<<<<<<<>>>>>>

ஆந்திராவில் விரைவில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில், மேயர் மற்றும் நகர்மன்ற தலைவர்களை நேரடியாக மக்கள் தேர்வு செய்யும் நடைமுறையை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

நெல்லூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த **28** மாத கால ஆட்சியில் ஏராளமான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மத்தியிலும், மாநிலத்திலும் இணக்கமான அரசுகள் அமைந்துள்ளதால், வளர்ச்சித் திட்டங்களை தடையின்றி செயல்படுத்த முடிவதாக அவர் கூறினார்.

உள்ளாட்சி அமைப்புகளிலும் இதேபோன்று இணக்கமான நிர்வாகம் அமைந்தால், வளர்ச்சி மேலும் விரைவுபடுத்தப்படும் என்று திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தில்லியில் மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில் மின்சார ஆட்டோ திட்டம் தொடங்கப்படும் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் முதல்கட்டமாக ஆயிரத்து 300 இளஞ்சிவப்பு நிற மின் ஆட்டோக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், ஆயிரத்து 170 மின் ஆட்டோக்கள் பெண்களுக்கும், 130 மின் ஆட்டோக்கள் திருநங்கைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தில்லி அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

உலக மூட்டுவாத தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மூட்டுவாத சிகிச்சையில் இயன்முறை மருத்துவம் முக்கிய பங்காற்றுவதாக தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை சேர்ந்த இயன்முறை மருத்துவர் திரு புண்ணியகோட்டி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — புண்ணியகோட்டி — 50 Sec. )***

<<<<<<<>>>>>>

ரஷ்யா — யுக்ரைன் இடையே எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதை தடுக்கும் நோக்கில் எரிசக்தி போர் நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த போர் நிறுத்தத்திற்கு ரஷ்யாவும், யுக்ரைனும் ஒப்புக்கொண்டுள்ளதாக சமூக வலைதளத்தில் திரு ட்ரம்ப் கூறியுள்ளார்.

எனினும், இதுகுறித்து முழுமையான விவரங்களை அவர் பதிவிடவில்லை.

இந்த போர்நிறுத்தம் அறிவிப்பு தொடர்பாக ரஷ்யா இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ரஷ்யாவின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த தயாராக இருப்பதாக யுக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபரின் அறிவிப்பை வரவேற்பதாகவும், ஆனால், இந்த அறிவிப்புக்கு பிறகும் ரஷ்யா தங்களது நாட்டின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் திரு ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான பாரம்பரிய மரபுசார் விளையாட்டு நிகழ்வு அகமதாபாதில் இன்று நடைபெறுகிறது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இதனை தொடங்கிவைக்கிறார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் பாரம்பரிய விளையாட்டு நடைமுறைகளை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போட்டித்தன்மையும், வெற்றித் தோல்வியும் இல்லாத நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இதில், கலாச்சார பகிர்வு, கலந்துரையாடல் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் குறித்த அறிவு பகிர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில், இந்தியா - மலேசியாவை வென்றது.

மலேசியாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா **4-0** என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதன்மூலம் அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள **17** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

---------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், நேற்றைய ஆட்டத்தில், கேரளம் அணி **2-0** என்ற கோல் கணக்கில், **Kashi** அணியை வென்றது.

---------------

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி அமெரிக்காவின் **Lasvegas-**ல் இன்று தொடங்குகிறது.

**18-**ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில், பல்வேறு நாடுகளை சேர்ந்த **600-**க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**<<<<<<<<END>>>>>>>**